**JAGDISH ASTROLOGER**

Chennai.

**Cell : 9884292394**

Predictions, Birthstones, Counseling

Sarpa Dosham, Graha Dosha Pariharam,

Horoscope Matching for Marriage.

19-Dec-23

# சனி பெயர்ச்சி - 2023

**(வாக்கிய பஞ்சாங்கப்படி - திருநள்ளாறு விசேஷம்)**

**ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் மார்கழி மாதம் 4 ம் தேதி (20-12-2023) புதன்கிழமை சரியாக மாலை 05:22 மணிக்கு சனி பகவான் மகர ராசியிலிருந்து கும்ப ராசிக்கு செல்கிறார். 6/03/2026 வரை கும்ப ராசியில் தங்குவார்.**

# TRANSIT OF LORD SANI – 2023

**According to " vakkiya Panchang"**

**Planet Sani Graha ( Saturn) is going to transit on 20-12-2023, Wednesday from Makara Rasi (Capricorn) to Kumba Rasi (Aquarius) at evening 05:22 P.M.**

**It will stay until March 6th , 2026.**

JAGDISH ASTROLOGER

**Why everyone gets scared about Sani is because it stays in one Rashi for 2 ½ years. If it stays in bad place the whole 2 ½ years will be a trouble and pain period.**
**But Sani is really a very good planet, it all depends how you take it. Sani is considered as a God of Karma, so it punishes only if you do wrongful acts, otherwise if you have dedication, sincerity and put severe hard work, it will definitely reward you.**

**It is a slow and lethargic planet, it may not give good or bad things immediately, but it finds right time to deliver. Sani will give all kind of good, bad and terrible experiences, worst situations and difficulties, only to mould you to get into better path.**

**Out of 12 rashis, Sani favours to do good things only if it is in 3, 6, 10, & 11th place and the rest of the 8 places are not good.**

**If Sani is bad for you, then it makes you worry for every small things, pains, sufferings, mental tensions will be more, have to face plenty of humiliations, your self – respect and reputation will go down. It will waste your time and energy you spent for, all your efforts will be of no use, every task will be delayed or you have to face many obstacles. Frustrations, desperations and depressions are common. Sani will spoil relationship with relatives, unnecessary fights and disputes will arise, it will reduce the income and give more expenses, debts and burdens.**
**Yet, Sani never spoils anybody's life but it punishes severely until he realizes.**

**If Sani is good for you, then it will give you sudden gain of money or wealth, unexpected growth in every way, favor of luck, remarkable success, high position and fame. Every bit of hard work will be getting paid.**

**Mostly people who go through 7 ½ SANI (12, 1, & 2nd place) and Ashtama Sani (8th place) will have severe bad impact.**

**And half of this bad impact will be for people who go through Arthastama Sani (4th place).**

**SANI MOULDS A HUMAN AS A PERFECT HUMAN BEING.**

JAGDISH ASTROLOGER

பொதுவாக, சனி போல கொடுப்பவனும் இல்லை - சனி போல கெடுப்பவனும் இல்லை என்பார். சனி கொடுக்க நினைத்தால் மற்ற 8 கிரகங்கள் தடுக்காது, அதே போல கெடுக்க நினைத்தாலும் மற்ற 8 கிரகங்கள் தடுக்காது.

நாம் எதை விதைக்கிறோமோ, அதையே அறுவடை செய்வது போல, நாம் எப்படி நடந்து கொள்கிறோமோ அப்படியே சனி நம்மிடம் நடந்து கொள்ளும்.

ஒருவரை, அவரின் வாழ்க்கை பாதையில் கற்களிலும், முட்களிலும் நடக்க வைத்து, தொடர்ச்சியாக வேதனைகள் - அவமானங்களை கொடுத்து, தினம் தினம் பல விதமான பிரச்சினைகளை சந்திக்க வைத்து, அடிபட்டு, மிதிபட்டு, சித்திரவதை படுத்தி, மனதை முற்றிலுமாக நோகடித்து - போதும் இந்த வாழ்க்கை என எண்ண வைத்து - எதிர்பாராத நிலையில் மலையின் உச்சிக்கே கொண்டு சென்று விடுவார். அப்படி சென்றவரை கர்வம், அகம்பாவம் ஆட்கொண்டால் - பாகுபாடின்றி கீழே கொண்டு வருவது மட்டுமின்றி செய்த பாவத்திற்கேற்ப தண்டனையும் தந்து விடுவார் இந்த சனி பகவான். வாழ்க்கையில் வரும் அனைத்தும் பிரச்னையையும் எதிர்கொள்ள துணிச்சலையும், அதை கையாள்வதற்குரிய பக்குவத்தையும் தருவார்.

அரசாளும் மன்னருக்கு சமமானவர்களை ஆண்டியாகவும், அதே போல ஒரு ஆண்டியை அரசாளும் நிலைக்கே கொண்டு செல்லும் சக்தி படைத்தவர் இந்த சனி பகவான்.

சனி பகவான் இக்கலியுகத்தின் நீதிபதியாவார்.

ஒரு மனிதனை நல்ல மனிதனாக மாற்றுபவர்.

## 7 ½ சனி விளக்கம்:

ஒருவரின் பிறந்த ராசிக்கு **12-ல் சனி** வரும் போது **" ஏழரை சனி "** தொடங்குகிறது. **12, 1, 2** இந்த மூன்று ராசிகளிலும், ராசி ஒன்றுக்கு **2 ½ ஆண்டு** வீதம் **ஏழரை ஆண்டுகள்** இருப்பார். **ஒரு முறை 7 ½ சனி வந்தால் மீண்டும் 30 ஆண்டுகள் கழித்து வரும். ஆக எல்லோருக்கும் 7 ½ சனி என்பது வரத்தான் செய்யும்.**

ஒருவருக்கு **28 வயதுக்குள் வந்தால் " மங்கு சனி " ஆகும்**, **இது மிக கொடிய தீய பலன்கள் தரும்.**

ஒருவருக்கு **28 வயதுக்கு மேல் வந்தால் " பொங்கு சனி " ஆகும்**, **இது தீய பலன்கள் குறைவாகவும், சில நற்பலனையும் தரும்.**

இந்த **7 ½ சனி** காலங்களில் இடைவிடாமல் கஷ்ட - நஷ்ட பலன்களைக் சனி கொடுத்து கொண்டேயிருப்பார். பல விதமான போராட்டங்களை சந்திக்க வேண்டியிருக்கும்.

பொதுவாக **" ஏழரை சனி "** ஒருவரை மாற்றி அமைத்து பக்குவபடுத்தும். நேற்றைய பொழுது வீணாகி விட்டதே, இன்றைய பொழுதும் சரியில்லையே, நாளை என்னதான் நடக்கும் என்று வருவதை நினைத்து வருத்தபட வைக்கும்.

இதில், முதல் **5 ஆண்டுகள்** கொடிய தீய பலன்களை தரும்.

### இந்த ஏழரை ஆண்டுகளில்,

முதல் **2 ½ ஆண்டு - "விரய சனி" - 80% கெடுதல்(மீன ராசி)**

2வது **2 ½ ஆண்டு-"ஜென்ம சனி" - 70%கெடுதல் (கும்ப ராசி)**

3வது **2 ½ ஆண்டு-"பாத சனி" - 60%கெடுதல் (மகர ராசி)**

JAGDISH ASTROLOGER

## ஒவ்வொரு ராசிகளும் எந்தவித பலன்களை அடைகிறார்கள் என்பதை பார்ப்போம்

### சனியால் அதிக நன்மை அடையும் ராசிகள்:

**Out of 12 Rashis the most benefitting Rashis are: (90% positive) (2023 - 2026 )**

**தனுசு - Dhanus [Sagittarius] - 3** ம் இடம்

[முயற்சி, திறமை, துணிவு, மனோபலம்]

**கன்னி - Kanya [Virgo] - 6** ம் இடம்

[வியாதி, கடன், பகை, விரோதம், சவால்]

**ரிஷபம் - Rishabam [Taurus] - 10** ம் இடம்

[ வேலை, தொழில், வருவாய், கடமை]

**மேஷம் - Mesham [Aries] – 11** ம் இடம்

[லாபம், வெற்றி, வசதி, முன்னேற்றம்]

### சனியால் சுமாரான நற்பலன் அடையும் ராசிகள்:

**Rashis, which gets moderate benefit: (60% Positive)** பாதி நன்மை **(2023 - 2026 )**

**மிதுனம் - Mithunam [Gemini] - 9** ம் இடம்

[ அதிர்ஷ்டம், பாக்கியம், புண்ணியம், செல்வம், யோகம்]

**துலாம் - Thulam [Libra] - 5** ம் இடம்

[ பூர்வ புண்ணியம், புத்திர ஸ்தானம், எதிர்காலம், அறிவு திறன், எதிர்பாராத யோகம்]

## சனியால் மிதமாக கெடுதல் அடையும் ராசிகள்:

**Rashis, which gets affected moderately:**

**(60% Negative – 60% கெடுதல்) (2023 - 2026 )**

**விருச்சிகம் - Vrischika [Scorpio] – 4 ம் இடம்- அர்த்தாஷ்டம சனி**

[வீடு, வாகனம், பூமி, செல்வம், சுகம், சந்தோஷம்]

**சிம்மம் - Simmam [Leo] - 7 ம் இடம் - கண்டச் சனி**

[ திருமணம், தொழில், சுப பலன், சௌபாக்கியம்]

**மகரம் - Makaram [Capricorn] - 2 ம் இடம் - 7 ½ சனி**

[ தனம், வாக்கு, குடும்பம், பொருளாதாரம்]

## சனியால் கடுமையாக பாதிப்பு அடையும் ராசிகள்:

**Rashis, which gets affected severely:**

**(80% Negative - 80% கெடுதல்) (2023 - 2026 )**

**கடகம் - Kadakam [Cancer] - 8 ம் இடம்- அஷ்டம சனி**

[ வலி, வேதனை, வியாதி, போராட்டம், வம்பு, வழக்கு]

**மீனம் - Meenam [Pisces] - 12 ம் இடம் - 7 ½ சனி**

[ நஷ்டம், செலவுகள், விரயம், மருத்துவ செலவு]

**கும்பம் - Kumbham [Aquarius] – 1 ம் இடம் - 7 ½ சனி**

[ஜென்ம சனி, உடல்நலம், செயல் திறன், பொது நலன்]

## மேஷம் (ARIES): (90% நன்மை - 90% GOOD) (2023 -2026)

மேஷ ராசிக்காரர்களுக்கு - **20-12-2023** முதல் தங்கள் இராசிக்கு சனி பகவான் **11 -ம்** இடத்திற்க்கு வருகிறார். இது மிக மிக உன்னதமான இடமாகும்.

**பொதுவாக, ஜோதிடப்படி, 11ம் இடம் - லாபம் - வெற்றி - முன்னேற்றத்தை குறிக்கும் இடமாகும்.**

**சனி போல கொடுப்பவன் இல்லை என்பர். அதை நன்றாக உணர்ந்து மிக பெரிய இராஜயோகத்தை அனுபவிக்கலாம்.**

**பதினோராமிடத்தில் சனி! பணத்தேவைகள் பூர்த்தியாகும் இனி!!**

எண்ணிய காரியங்கள் யாவும் கைகூடும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகி, வசதி வாய்ப்புகைளப் பெருக்கிக் கொள்வீர்கள். **அனைத்து வகையிலும் லாபமும், தனயோகமும், செல்வ சேர்க்கையும் கிட்டும்.**

புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். தொழிலில் பெருத்த லாபமும், பொருள் சேர்க்கையும் கிட்டும்.

வேலையில் இருப்பவர்களுக்கு, புதிய பதவியும், பொறுப்பும் வரும், உங்கள் திறமைகள் வெளிப்பட்டு அதற்கான அங்கீகாரமும், நற்பெயரும் கிடைக்கும்.

அரசியல் ஈடுபாட்டில் இருப்பவர்களுக்கு, நல்ல ஆதாயமும், பேரும், புகழும், பதவியும் தேடி வரும்.

**பதினொன்றில் சனி வந்தால் பண வரவு அதிகரிக்கும். மதிப்பு மிகும், சமூகத்தில் மரியாதை மிகக்கூடும். நதிபோல துயர் ஓடும். நலம் யாவும் தேடிவரும்.**

**புதிய சொத்துக்கள் சேரும், புதிய வீடு அமையும் வாய்ப்பு வரும். பொன் ஆபரணங்கள் சேரும், புதிய வாகன யோகம் உண்டாகும். திருமணம் மற்றும் அனைத்து சுப மங்கள காரியங்கள் யாவும் இனிதாக நடக்கும். திட்டமிட்ட காரியங்கள் யாவும் தெளிவாக செயல் படுத்த முடியும். வேலை அல்லது மேல் கல்விக்காக, வெளிநாடு செல்பவர்களுக்கு ஏற்ற காலமிது.**

**சகல சௌபாக்கியங்களும் கிடைத்து மனம் மகிழ்ச்சியில் மிதந்து, இராஜயோகம் அனுபவிக்கும் காலமிது.**

JAGDISH ASTROLOGER

**ரிஷபம் (TAURUS): (90% நன்மை - 90% GOOD) (2023 -2026)**

ரிஷப ராசிக்காரர்களுக்கு - **20-12-2023** முதல் தங்கள் இராசிக்கு சனி பகவான் **10 -ம்** இடத்திற்க்கு வருகிறார். இது மிக உன்னதமான இடமாகும்.

**ஜோதிடப்படி, 10ம் இடம் - தொழில் - வருவாய் - வேலை - உத்தியோகம் - ஆதாயம் - ஒருவரின் வாழ்வாதாரம் - தொழில் ரீதியாக கிடைக்கும் அந்தஸ்து ஆகியவைகளை குறிக்கும் இடமாகும். ஆக, இதன் சார்ந்த விஷயங்களில் சனி மிக பெரிய யோகத்தை தருவார்.**

**ஒருவரின் வேலை - உத்தியோகம் - தொழிலில் அபரிதமான வளர்ச்சி காணும் காலமிது. முதலீடுகள் செய்து, புதிய தொழில் தொடங்கலாம், வேலை இல்லாதவர்க்கு, நல்ல வேளை கிடைத்து வாழ்க்கையில் செட்டில் ஆகலாம். பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் சனி செயல் ஸ்தானத்தைப் பலப்படுத்துகிறது. எனவே, செய்யும் செயல்கள் யாவும் சிறப்படையும்.**

**நிரந்தர வருமானத்துக்கு அடித்தளம் போடும். பல வழியிலும் வருமானம் வரும். உன்னதமான நிலைக்கு வாழ்க்கை எடுத்து செல்லும். மனதில் புது தெம்பும் - சுறுசுறுப்பும் தந்து, கடினமாக உழைக்கும் ஆற்றல் தந்து பின் அதற்கு ஏற்ற பலனும், ஆதாயமும், நல்ல முன்னேற்றமும் தருவார்.**

**Civil Construction, Builders – Promoters, Real Estate, Politics, Public Relations, HRD, Marketing, IT, Art – Media, Cinema, Social Media –** இந்த துறைகளில் இருப்பவர்களுக்கு மிக ஏற்றமான காலமிது.

**புதிய வீடு கட்ட - வாங்க வாய்ப்பு தேடி வரும், புதிய வாகனம், வீட்டுக்கு தேவையான நல்ல விலை உயர்ந்த பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள். சொந்தம் - பந்தம் யாவும் தேடி வரும், கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும், பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம் தெரியும்.**

**பொதுவாக, பத்தில் சனி வந்தால் பார்போற்றும் நிலை அமையும்! மிகுந்த சுகம் கிடைக்கும்! குடும்பத்தில் நிம்மதியும், மகிழ்ச்சியும் பெருகும்.**

JAGDISH ASTROLOGER

# மிதுனம் (GEMINI):(60% நன்மை - 60% GOOD) (2023 -2026)

மிதுன ராசிக்காரர்களுக்கு - **20-12-2023** முதல் தங்கள் இராசிக்கு சனி பகவான் **9 -ம்** இடத்திற்க்கு வருகிறார்.

**கடந்த காலம், அஷ்டம சனியால் மிகுந்த வலி, வேதனைகள், கஷ்ட - நஷ்டங்கள், களங்கம், கடன் தொல்லைகள், அவமானம் போன்ற சொல்லோணாத துன்பங்களை அனுபவித்த உங்களுக்கு, தற்போது இந்த சனி பெயர்ச்சி மிக பெரிய விடுதலை தரும்.**

**`ஒன்பதில் சனி வந்தால் உயர்வுகள் வந்து சேரும்! பண்பிலார் பழக்கம் மாறும்! பகையல்லாம் விலகி ஓடும்! நண்பர்கள் அதிகம் சேர்வர்! நல்லதோர் பதவி வாய்க்கும்! கண்படும் விதத்தில்- உங்கள் கனிவான வளர்ச்சி கூடும்!'**

**இருந்த போதும், 9 -ம் இடம், சனிக்கு உகந்த இடம் ஆகாது. அனைத்து காரியங்களிலும் தடங்களும், கால தாமதமும் ஆகும், இதனால் மனக்கவலை உண்டாகும்.**
**பொருள் நஷ்டமும், கெட்ட பெயரும், எதிர்பாராத சிறு விபத்துக்களும் வரலாம், ஆனாலும் அதிகம் பாதிக்காது. முன்நாளில் செய்த தவறுகளுக்கு தண்டனை அடையும் நிலை ஏற்படலாம்.**
**வெளியூர் பிரயாணங்கள் நன்மை அளிக்காது, ஆபத்தும் நஷ்டமும் ஏற்படும், எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.**
**கடின உழைப்பால் பொருளாதர முன்னற்றம் உண்டாகும், கஷ்டங்கள், கடன்கள் தீரும், கடந்த கால இருள் விலகுவதுடன், மனதில் நிம்மதியும், புது வித உற்சாகமும், தன்னம்பிகையும் உண்டாகும்.**
**குடும்பத்தில் உள்ளவர்களுக்கு நோய் தொல்லைகள் உண்டாகலாம், குறிப்பாக தந்தைக்கு உடல் நலம் கெடலாம், கவனம் தேவை.**
**சனி பகவானுக்கு தக்க பரிகாரங்கள் செய்து வந்தால் பிரச்சினைகள் குறையும்.**
**அஷ்டம சனி விலகியதே மிக பெரிய யோகம் ஆகும். கடந்த கால பிரச்சினைகள் யாவும் தீருவதுடன், சில நன்மைகள் வரும் என்று எதிர்பார்க்கலாம்.**

JAGDISH ASTROLOGER

## கடகம் (CANCER):(80% தீமை - 80% BAD) (2023 -2026)

கடக ராசிக்காரர்களுக்கு - **20-12-2023** முதல் **6-3-2026** வரை தங்களுக்கு **"அஷ்டம சனி "** நடக்கும் காலமாகும். இது மிக கொடிய காலமாக கருதப்படுகிறது.

ஏழரை ஆண்டுகள் **7 ½** சனி, கெடுப்பதை சுருக்கி **2 ½ ஆண்டுக்குள்** அவ்வளவு வேதனைகளையும் திணித்து விடுவார் சனி பகவான். அனைத்து விஷயங்களிலும் மிகவும் எச்சரிக்கையும், கவனுமும் தேவை. வாக்கு - பேச்சில் கவனம் தேவை, கொடுக்கல் - வாங்கல் ஆகவே ஆகாது, பகைமை வளர்த்தல் ஆகாது. தன் நடத்தை நன்றாக இருத்தல் மிக அவசியம்.

**வீண் விரயங்கள், பெருத்த பண நஷ்டம், வியாதிகள், வேதனைகள், மருத்துவ செலவு, எதிரி தொல்லை, வீண் சண்டைகள், அசிங்கம், அவமானம், கெட்ட பெயர், வம்பு - வழக்கு, எதிர்பாராத சம்பவங்கள் போன்ற வேண்டாத பிரச்சினைகள் தரும். சிலருக்கு எதிர்பாராத பண வரவு கிடைக்கும், அதே சமயம் சட்ட பிரச்சினைகளும் வரலாம். சமுதாயத்துக்கு அஞ்சி வாழ வேண்டிய சூழ்நிலையும் உருவாகலாம். ஒருவரின் உழைப்பில் வரும் பணத்தை தவிர, வேறு எவ்வழியில் பணம் வந்தாலும் (கடனாக இருந்தாலும்), அவை யாவும் பின்நாளில், பெரிய சிக்கலை ஏற்ப்படுத்தும். பொதுவாக அஷ்டம சனியானது, எட்டு திக்கிலும் பிரச்சினைகள் தந்து கொண்டே இருக்கும்.**

**கணவன் - மனைவிக்குள் சண்டை சச்சரவுகள் கட்டுக்கு அடங்காமல் போகும், சிலருக்கு விவாகரத்து வரை செல்லலாம். இதனால் அனைத்து சொந்தமும் பகையாகும். பெற்றோர்கள் வாலிப வயதில் பிள்ளைகள் இருந்தால், அவர்களின் நடவடிக்கைகளில் அக்கறையும், கண்காணிப்பும் தேவை, குடும்பம் மானம் கெடலாம். குடும்பத்தில் ஒருவருக்கு அஷ்டம சனி இருந்தாலும், மொத்த குடும்பமும் பல விதத்திலும் கஷ்ட படும்.**

**பொதுவாக, அஷ்டம சனி - அசிங்கப்படுத்தும், ஆட்டி படைக்கும், சேர்த்து வைத்த பேரு, சொத்து, பணம், நகை மற்றும் மரியாதை யாவும் துடைத்து, கெடுத்து, நோகடிக்கும்.**

JAGDISH ASTROLOGER

## சிம்மம் (LEO):(60% தீமை - 60% BAD) (2023 -2026)

சிம்ம ராசிக்காரர்களுக்கு 7 -ம் இடத்திற்க்கு வருகிறார். - 20-12-2023 முதல் 6-3-2026 வரை தங்களுக்கு **"கண்டச் சனி"** நடக்கும் காலமாகும். இது சிறிது கெட்ட காலமாக கருதப்படுகிறது.

**7 -ம் வீட்டில் சனி இருந்தால், சனி தனது நேர் பார்வையான 7-ம் பார்வையை சிம்ம ராசியின் மேல் பதிப்பார். ஒரு காவலாளியின் கட்டுப்பாட்டிற்க்குள் நீங்கள் இருப்பது போல ஆகும். சிறு தவறானாலும் தண்டனை கிடைக்கும். இதனால், வீண் கவலைகளும் அச்சமும் தரும். கணவன் மனைவி உறவில் விரிசல் - கசப்பு வரும், இதனால் குடும்பத்தில் நிம்மதி கெடும். மனவேதனைகள் வரும்.**

**இந்த இடம், ஒருவருக்கு வாழ்வில் கண்டம் அல்லது அதற்கு ஒப்பான நோய் அல்லது பிரச்சினைகள் தரும் என்பர். (ஆனால் உயிர் பாதிப்பு வராது என்பது மட்டும் உண்மை.)**

சனிக்கு, 7 –ம் இடம், **பிரச்சினைக்குரிய இடமே, மிகுந்த கவனம் தேவை. தீய சகவாசம், தீய பழக்கங்கள் வரும். இதனால், பெயர் கெட்டு போவதுடன் பெருத்த பணநஷ்டமும் உண்டாகும். எதிலும் நிதானமும், கவனமும் தேவை. ஆபத்தான தொழில் செய்வோரும் வாகனங்களில் பயணம் செய்யும் போதும், மிக கவனமாக இருப்பது அவசியம் ஆகும். வெளியூர் பிரயாணங்கள் அடிக்கடி ஏற்படும், ஆனால் அதில் நன்மை உண்டாகாது. அலைந்து, திரிந்து பரிதவிக்க வேண்டியதாக இருக்கும்.**

தொழில் செய்வோர்கள், வேலை ஆட்களை அனுசரித்து போவது நல்லது. கூட்டுத் தொழில் செய்வோருக்கு பார்ட்னர்களால் கசப்பும், பிரச்சனைகளும் வரும். அதிக கடன் வாங்கி முதலீடு செய்வது ஆகாது. அதே சமயம் தொழிலில் இடையூர்கள் வந்தாலும், எந்த பாதிப்பும் வராது. வேலை - உத்தியோகத்தில் இருப்பவர்கள், அதிக லீவு எடுப்பதை தவிர்க்கவும், மேல் அதிகாரிகளை பகைத்துக் கொள்ள கூடாது.

**மனதில் ஒரு இறுக்கம், மந்தம், வெறுப்பு, கசப்பு தோன்றும்.**

**சனி நம்மை உணர வைப்பவர் மட்டுமே. அதனால், சனி பகவானுக்கு தக்க பரிகாரங்கள் செய்து வந்தால் பிரச்சினைகள் குறையும்.**

JAGDISH ASTROLOGER

## கன்னி (VIRGO):(80% நன்மை - 80% GOOD) (2023 -2026)

கன்னி ராசிக்காரர்களுக்கு - **20-12-2023** முதல் தங்கள் இராசிக்கு சனி பகவான் **6 -ம்** இடத்திற்க்கு வருகிறார். இது மிக நல்ல இடமாகும்.

**ஆறில் சனிவந்தால், ஆதாய வரவுண்டு! சீரும் சிறப்பும் வரும்! செல்வாக்கும் கூடி வரும்! போராட்டம் வெற்றி பெறும்! புது வீடு-மனை வாய்க்கும்! குடும்பத்தில் மதிப்பு உயரும்- மகிழ்ச்சி நிலவும். எண்ணற்ற நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். சுறுசுறுப்பும் உற்சாகமும் அதிகரிக்கும். மனதில் புது தெம்பும், புத்துணர்சியும் உண்டாகி, சந்தோஷம் கலை கட்டும்.**

**நெருங்கிய உறவுகளிடையே இருந்து வந்த பிரச்னைகள் தீரும். எதிரிகள் தொல்லைகள் நீங்கும், வழக்குகளில் வெற்றி உண்டாகும், கடன் தொல்லைகளில் இருந்து விடுபடுவீர்கள்.** நீண்ட நாள் வழக்குகள் சாதகமாக மாறும். **வியாதிகள், வேதனைகள், கவலைகள் தீரும். ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும்.** ஆனாலும், 6 மிடம் வயிறை குறிப்பதனால், வயிற்றில் பிரச்சினைகள் வரலாம்.

**சமூகத்தில் மதிப்பு, மரியாதை உயரும். பண வரவு நன்றாக இருக்கும், நிறைய செல்வம் சேரும். சகல ஐஸ்வர்யங்களும் உண்டாகும். பொன் - பொருள் - பாக்கியம் தரும்.**

**நீண்ட நாள் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும், சிலருக்கு, ஸ்திர சொத்து அமையும், புது உயர்ரக வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். எதிர்பாராத தனலாபம் உண்டாகும். புது புது விலை உயர்ந்த பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளும், விருந்து உபசாரங்களும் அதிகம் நடக்கும்.**

**வேலை - உத்யோகத்தில் உள்ளவர்கள், மற்றும் தொழில் செய்பவர்களுக்கு மிகப் பெரிய வளர்ச்சி காணும் காலமிது. பொது ஜன தொடர்ப்பு, மற்றும் அரசாங்க ஆதரவும் கிடைக்கும்.**

**அடுத்த 2 ½ வருடம் மிக பெரிய யோகத்தை தந்து உங்களுக்கு, எந்த வித குறையும் இல்லாமல் பார்த்துக் கொள்ளும்.**

**பொதுவாக, சனி உங்கள் ராசிக்கு ஆறில் உலா வரும்பொழுது, மிச்சம் வைக்கும் அளவிற்கு பொருளாதார நிலை உயரும் என்பர்.**

JAGDISH ASTROLOGER

## துலாம் (LIBRA):(60% நன்மை - 60% GOOD) (2023 -2026)

துலா ராசிக்காரர்களுக்கு - **20-12-2023** முதல் தங்கள் இராசிக்கு சனி பகவான் **5 -ம்** இடத்திற்க்கு வருகிறார். தற்போது, உங்களுக்கு அர்த்தாஷ்டம சனி விலகி ஓரளவுக்கு சாதகமான இடத்துக்கு வந்துள்ளது எனலாம்.

**கடந்த மூன்று ஆண்டுகளை வைத்து பார்க்கும் பொழுது, அடுத்த 2 ½ ஆண்டுகள் மிகவும் நன்றாக இருக்கும் என்பது உண்மை என்றாலும், மிகுந்த நற்பலனை எதிர்பார்க்க முடியாது.**

**இனி ஓரளவு பணவரவு அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் யாவரும் தேடி வருவார். வீடு - வாகனம் சார்ந்த பிரச்சினைகள் தீரும். சனி 11ம் வீட்டை பார்ப்பதனால் வரும் லாபம் யாவும் வீண் செலவுக்கே செல்லும், அல்லது உழைப்புக்கு ஏற்ற லாபத்தை குறைக்கும்.**

**5 -ம் இடம் புத்தி, மனது, சிந்தனை, பிள்ளைகள் - பிள்ளைகளின் நலன், வயிறு, பூர்வீக சொத்து - இவைகள குறிப்பதனால், இவை யாவும் பிரச்சினையாக இருக்கும்.**

**குடும்ப சொத்தில் தகராறு, பாகப்பிரிவினை பிரச்சினை வரலாம். பிறர் விவகாரங்களில் வலியத் தலையிட்டு வம்பை விலைக்கு வாங்க வேண்டியதாகி விடும். வாழ்வில் திடீர் திருப்பங்கள் வரும்.**

**பெற்ற பிள்ளைகள் கொடுக்கும் தொல்லைகள் கண்டு, மனம் பாதிக்கும். பிள்ளைகளின் எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்ய முடியாமல் தவிப்பீர். இதனால் கணவன் - மனைவிக்குள் பிரச்சினைகள் வரும்.**

**மனதில் சோகமான எண்ணங்கள் உருவாகும். உள்மனதில் எதிர்மறை எண்ணங்கள் உருவாகும். மனம் நிலை கொள்ளாது. பொறுமையும் நிதானமும் தேவை.**

**தீயவர்களின் நட்பால் பொருள் விரயம், நிறைய பண விரயம் வரும். மற்றவர்கள் உங்களை பார்த்து எப்போதும் குறை கூறி கொண்டே இருக்கும் அளவுக்கு உங்கள் வாழ்வு இருக்கும்.**

**Any Gambling or even stock trading will give severe loss.**

**பூர்வ புண்ணிய பலம் இருந்தால் பிரச்சினைகள் குறையும். சனிக்கு பரிகாரமும், குல தெய்வ வழிபாடு நன்மை தரும்.**

JAGDISH ASTROLOGER

## விருச்சிகம்(SCORPIO):(60% தீமை - 60% BAD)(2023 -2026)

விருச்சிக ராசிக்காரர்களுக்கு சனி 4 -ம் இடத்திற்க்கு வருகிறார். 20-12-2023 முதல் 6-3-2026 வரை தங்களுக்கு "அர்த்தாஷ்டமச் சனி" நடக்கும் காலமாகும். இது முக்கால்வாசி கெட்ட காலமாக கருதப்படுகிறது. இந்த சனி ஆனது பாதி அஷ்டம சனி என சொல்லுவர்.

**4 –ம் இடம், வீடு, வாகனம், தாய், தாயின் நலன், உயர் கல்வி, நட்பு, உறவினர், சுகம், சந்தோஷம் மற்றும் அடிப்படை வசதிகள் போன்றவைகளை குறிப்பதால்,இவை யாவும் பிரச்சினைகளாகலாம்.**

**உற்றார் - உறவினர்கள், சொந்தம் - பந்தம் யாவும் பகையாகும். கணவன் மனைவிக்குள் சந்தேக புத்தியும், சண்டை சச்சரவுகளும் ஓயாது, இதனால், வீட்டினுள் இருக்கும் மொத்தம் நிம்மதியும் கெடும். சிலருக்கு, குடும்பத்தை விட்டு பிரிந்து வாழ வேண்டிய சூழ்நிலை உருவாகும். இருக்கும் சந்தோஷம் பறிபோகும், செல்வம் விட்டு விலகும். மனக்குழப்பம் வாட்டும். மனதில் வெறுப்பும், கசப்பும், சோக உணர்வும் தோன்றும். புத்தி மந்தம், நினைவு குறைபாடு வரும்.**

**சிலர், தீய நட்ப்பால், கெட்ட பழக்கத்திற்க்கு அடிமையாகலாம். இஷ்டம் போல எதையாவது செய்து, தாங்களே பல பிரச்சினைகளை தேடி கொள்வீர். வாகனத்தால் பிரச்சினைகள், பிரயாணத்தில் இடையூறுகள், அடிக்கடி வாகனம் பழுது அடைதல், சிறு - சிறு விபத்துக்கள் வரலாம். வீண் அலைச்சல்கள், மனதில் பல வித கவலைகள் தந்து அலைந்து திரிய வைக்கும். எந்த சுகமும் கிடைக்காது. உணவு கூட தக்க சமயத்தில் சாப்பிட முடியாது.**

**4 –ம் இடத்து சனி தாயாரின் ஆரோக்கியத்திற்க்கு கேடு தரும், தங்களின் சுகம், பொதுநலம் கெடும். உடல் ஆரோக்கியம் கெடும். புதிய நோய்கள் வரும். மருத்துவ செலவுகள் வரும். உயர் கல்வி கற்ப்பவர்கள் போராடி பயில வேண்டியிருக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு, மன அழுத்தம், மற்றும் வேலை பளு அதிகரிக்கும். சிலருக்கு வேலை இடமாற்றம் வரலாம். வசிக்கும் வீட்டை மாற்றவோ அல்லது வெளியூர் சென்று வாழும் நிலை வரும்.**

JAGDISH ASTROLOGER

# தனுசு(SAGITTARIUS):(90% நன்மை-90% GOOD)(2023-2026)

தனுசு ராசிக்காரர்களுக்கு - 17-12-2014 அன்று பிடித்த "ஏழரை சனி" 20-12-2023 அன்று முற்றிலும் முடிகிறது.

தற்போது தங்கள் இராசிக்கு 3 -ம் இடத்திற்கு சனி வருகிறார். இது ஏழரை சனியில் இருந்து விடுதலை ஆகும்.

**கடந்த 9 வருடம் அனுபவித்த வலியும், வியாதியும், வேதனையும், கஷ்ட - நஷ்டங்கள், அவமானங்கள், கவலைகள் யாவும் முழுவதுமாக முடிவுக்கு வரும். இந்த சனிப் பெயர்ச்சி, உங்கள் வாழ்வில் மிக பெரிய வளர்ச்சிக்கான திருப்புமுனையாக இருக்கும். தடைகளும் குறுக்கீடுகளும் விலகும். இனி மெல்ல மெல்ல பிரச்சனைகள் தீர்ந்து, வாழ்வில் வசந்தம் உண்டாகும்.**

**தொட்டது பொன்னாகும், நினைத்தது யாவும் நடக்கும். எடுத்த காரியங்கள் அனைத்தும் வெற்றியை அளிக்கும். அடுத்த மூன்று ஆண்டுகளில் சகல யோகங்களும் உங்களுக்கு கிடைக்கும்.**
**செல்வம், வசதி வாய்ப்பு பெருகும், பொன் - பொருள் சேரும். வெற்றி, புகழ், பெருமை அந்தஸ்து, செல்வாக்கு யாவும் நாடி வரும்.**

**உடல் ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். கணவன் மனைவி உறவில் மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிலவும். தடைகளும் குறுக்கீடுகளும் விலகும். எதிரிகளை வீழ்த்தும் ஆற்றல் உண்டாகும். விரோதிகள் அழிவார்கள்.**

**சமுதாயத்தில் செல்வாக்கு, அந்தஸ்து பெருகும். வீண் செலவுகள் குறைந்து பொன் - பொருள் சேரும். மனக்கவலை அகன்று மகிழ்ச்சி ஏற்படும். வீண் செலவுகள் குறைந்து, கடன் யாவும் தீரும்.**
**உத்தியோகம் - செய்தொழிலில் அபரீத வளர்ச்சி உண்டாகும். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு அமையும். அரசாங்க ஆதரவும், பட்டம் - பதவி உயர்வும் கிடைக்கும். நிலம், பூமியோகம், சொந்த வீடு யோகம், புதிய வாகனம் வாங்கும் யோகம் மற்றும் தனயோகமும், லஷ்மி கடாட்சமும் உண்டாகும்.**
**சனி மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கும் காலம் முன்னேற்றங்கள் அதிகரிக்கும்.**

JAGDISH ASTROLOGER

## மகரம்(CAPRICORN):(60% தீமை - 60% BAD)(2023 -2026)

மகர ராசிக்காரர்களுக்கு - **20-12-2023** முதல் தங்கள் இராசிக்கு சனி பகவான் **2 -ம்** இடத்திற்க்கு வருகிறார். இந்த இடம் சனிக்கு சற்று நல்ல இடம் ஆகும். தற்போது உங்களுக்கு ஜென்ம சனி விலகியது.

**2 –ம்** இடத்து சனி **7 ½ சனியில் கடைசி பகுதியான** **“ பாத சனி ”** ஆகும். இந்த சனி ஆனது குடும்ப சனி எனவும் சொல்லுவார்கள்.

**முற்றிலும் ஏழரை சனி முடியாவிட்டாலும், பெரிய பாதிப்புகளை கடந்து வந்து விட்டீர்கள். துன்பங்கள் இனி சிறிது சிறிதாக குறையும். மனக்கவலைகள் அகலும். சோதனைகள் குறையும். இருட்டில் இருந்த நீங்கள், இனி சிறிது ஒளியை காணலாம். வாழ்வை இழந்த தங்களுக்கு இனி புது வாழ்வு பிறக்கும். பட்டது போதும் என்கிற மனநிலைக்கு வந்து விட்டீர்கள்.**

**குடும்பத்தில் கொடி கட்டிப் பறந்த பிரச்சினைகள் படிப்படியாக மாறும். கணவன் - மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். குடும்பத்தில் நிம்மதியும் சந்தோஷமும் இருக்கும்.**

**சிலருக்கு எதிர்பாராத வகையில் சொத்து சேர்க்கையும், பணவரவும் உண்டாகும். பொருளாதார வளர்ச்சி தரும். சேமிப்புகள் கரைந்ததே என்று கவலைப்பட்ட உங்களுக்கு இனி அவைகளை ஈடுகட்டும் விதத்தில் வாய்ப்புகள் வந்து சேரும்.**

**பாத சனியாவதால், சிற்சில பாதிப்புகள் வரும், மனக்கவலைகள் அகலாது. வாக்கு- பேச்சில் பிரச்சனைகள் வரும். உடல் நலனில் அக்கறை தேவை. கண், பல், முகம், கால், பாதம் சார்ந்த வலி நோய்கள் வரலாம்.**

**வேலை - உத்தியோகஸ்தர்க்கு முன்னேற்ற காலம். வேலை இல்லாதவர்க்கு, நல்ல வேலை கிடைக்கும். தொழில் செய்வோர்கள், நல்ல வளர்ச்சி காண்பதோடு, பண வருமானமும் பெருகும். கடுமையாக உழைத்தே பயன் பெற வேண்டிவரும் என்பதால் உழைப்புக்குப் பின்வாங்கலாகாது.**

**இந்த மூன்று வருடம் நிறை குறை பலன்களாக இருக்கும். கொடிய பலன்கள் நீங்கியது என்பது மட்டும் உண்மை.**

JAGDISH ASTROLOGER

## கும்பம் (AQUARIUS):(80% தீமை - 80% BAD)(2023 -2026)

கும்ப ராசிக்காரர்களுக்கு - 20-12-2023 முதல் சனி பகவான் தங்கள் இராசிக்கே 1 -ம் இடத்திற்க்கு வருகிறார். இந்த இடம் சனிக்கு மிக கெட்ட இடம் ஆகும்.

1 –ம் இடத்து சனி 7 ½ சனியில் இரண்டாவது பகுதியான " ஜென்ம சனி " ஆகும். இது கடந்த 2 ½ வருடம் நடந்த விரய சனிக்கு பரவாயில்லை எனலாம். இருந்த போதும் 7 ½ சனியின் பாதிப்பு இன்னும் அடுத்த 2 ½ வருடத்திற்க்கு சற்று கடுமையாக தான் இருக்கும். வரும் வேதனைகளை அனுபவித்து தான் ஆக வேண்டும் என்பதே சனி இடும் கட்டளை ஆகும்.

இந்த ஜென்ம சனி, வீணான அலைச்சல், திரிசல், சோம்பல், மந்தம், கவலைகள், எதிலும் பிடிப்பு இல்லா போக்கு, ஒவ்வொரு நாளும் பொழுதை கழித்தாலே போதும் என்ற எண்ணம் வரும்.

உடல் ஆரோக்கியம் கெடும். வறுமையின் கோரப்பிடியில் சிக்கி தவிப்பீர்கள், சேர்த்து வைத்த காசு எல்லாம் ஏற்கனவே கரைந்தது, தற்போது கடனாளி ஆகி தவிப்பீர்கள். பணதட்டுப்பாடு தலைக்கு மேல் போகும். வேலை, தொழில் யாவும் பிரச்சினையாக தோன்றும். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காது. குடும்பத்தை விட்டு வெளியூர் - வெளிநாடு சென்று, அங்கு பல விதமான கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதாக இருக்கும். பலவிதமான இன்னல்கள் ஏற்படும். வாழ்க்கை, மிகுந்த போராட்டமாக தோன்றும்.
பழைய பிரச்சினைகளை மனதில் வைத்து, நண்பர்கள், சுற்றாத்தாரை பகைத்து கொண்டு, தங்களை தாங்களே தனிமை படுத்தி கொண்டு, கவலையில் வாழ வேண்டி வரும். மனமும் தீய வழியில் செல்லும். தற்போது வரும் அனைத்து கெட்ட அனுபவங்களும், படிப்பினையாக சனி மாற்றுவார். இக்காலத்தை அமைதியாக கடப்பதை தவிர வேறு வழியில்லை. மனதில் நிம்மதி கெடும். இனம் புரியாத பயமும், இறுகிய மனமும், மன அழுத்தமும் தரும். அதே சமயம் அதீத நம்பிக்கையும், லட்சியமும் உண்டாகி, பிறரை போல வாழ்ந்து காட்டனும் என்ற எண்ணமும் வெறித்தனமாக மேலோங்கும்.

JAGDISH ASTROLOGER

## மீனம் (PISCES): (80% தீமை - 80% BAD) (2023 -2026)

மீன ராசிக்காரர்களுக்கு - **20-12-2023** முதல் சனி பகவான் தங்கள் இராசிக்கே **12 -ம்** இடத்திற்க்கு வருகிறார். இந்த இடம் சனிக்கு மிக மிக கெட்ட இடம் ஆகும்.

**12 –ம்** இடத்து சனி, **7 ½ சனியின் ஆரம்பம்,** இந்த சனி ஆனது " **விரய சனி** " ஆகும். இது மிக கொடிய தீய பலன்களை தரும். **இக்காலத்தில் மிகுந்த கவனுமும், எச்சரிக்கையும் தேவை. கடுமையான உழைப்பு தேவை. நாவடக்கம் தேவை, பண விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை. புதிய முதலீடுகள் எதிலும் ஆகாது. வீண் விரயங்கள்- செலவுகள் உண்டாகமல் பார்த்துக் கொள்ளவும். கொடுக்கல் - வாங்கல் அறவே ஆகாது. அடுத்தவர்கள் பிரச்சினையில் தலையீடு ஆகாது.**

**கடந்த காலம் சேர்த்து வைத்த காசு, செல்வம், மரியாதை, நற்பெயர், கௌரவம், அந்தஸ்து, யாவும் பறிபோகும். கடந்த காலத்தில் உண்மையாக உழைத்து, பிறர் நலனில் அக்கரை செலுத்தி, நாலு பேருக்கு நல்லது செய்து இருந்தால் மட்டுமே, தப்பிக்க முடியும். இல்லையேல் சனியின் கடுமையான தண்டனையில் இருந்து தப்பிக்கவே முடியாது. பணத்தின் அருமையும், வறுமையின் வலியும் என்ன என்பதை சனி நன்றாகவே உணர்த்தும்.**

**முதலீடு செய்த பணமும், செலவு செய்த பணமும் திரும்பி வரவே வராது. பணம் முடங்கும். உறவினர்கள், நெருங்கிய சொந்தம் பகை ஆகலாம். பழக்க வழக்கம் கெடும், தீய நட்பு, தீய சகவாசம் தரும். நல்ல நண்பர்களிடம் பழகுவது நல்லது. வசிக்கும் வீட்டை மாற்றி கொள்ளுவது அல்லது வெளியூர் - வெளிநாடு சென்று உத்தியோகம் - தொழில் செய்வது நல்லது. மனைவி மக்களால் கவலை,வீண் பயம், கள்வர் பயம், பிறரிடம் ஏமாந்து பணத்தை இழத்தல், மருத்துவ செலவுகள் என பல விதமான தொல்லைகள் தொடர்ந்து வரும். தாய் - தந்தை உடல் நலத்தில் அக்கறை தேவை. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது அக்கறையும், கண்காணிப்பும் தேவை. கடுமையான உழைப்பு, நேர்மை, தெய்வ பக்தியும் மிகவும் தேவை.**

JAGDISH ASTROLOGER

# பரிகாரம் செய்து கொள்ள வேண்டிய ராசிகள்:

## கடகம், சிம்மம்
## விருச்சிகம், மகரம், கும்பம், மீனம்

---

## RASHIS WHICH ARE TO DO REMEDIES

## KADAKAM, SIMMAM, VIRUCHIKAM, MAKARAM, KUMBAM, MEENAM

JAGDISH ASTROLOGER

குறிப்பு:

பொதுவாக அவர்-அவர்களின் ஜாதகத்தில் நல்ல நேரம், நல்ல திசை - புத்தி நடந்தால் எவ்வித பிரச்சினையும் இன்றி தப்பிக்கலாம்.

உண்மை, உழைப்பு, லட்சியம், நேர்மை, நியாயம், தர்மம், கடவுள் பக்தி இருந்து, தகுந்த பரிகாரங்களும் சனிக்கு செய்து வந்தால் எந்த வித வேதனைகளையும் பெரியதாக அனுபவிக்க வேண்டியிருக்காது.

இல்லையேல், இந்த சனியின் கோரப்பிடியில் இருந்து எவராலும் தப்ப முடியாது.

## சனி கிரகத்துக்குரிய பரிகாரங்கள்:

1. வாரந்தோறும் சனிக்கிழமை **நவக்கிரக சனீஷ்வரனுக்கு எள் தீபம்** ஏற்றி 9 முறை வலம் வந்து வழிபடவும்.
2. மாதம் ஒரு சனிக்கிழமை **சிவன் கோவில்** சென்று அங்குள்ள சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து வழிபடவும்.
3. சனிக்கிழமைகளில் **ஆஞ்சனேயர்க்கு** வெற்றிலை (அ) வடை மாலை (அ) வெண்ணை சாற்றி வழிபடவும்.
4. வெள்ளியில் **கரு நீலம் (Blue Sapphire) கல்** பதித்த மோதிரம் செய்து இடது கை நடு விரலில் சனிக்கிழமை அதிகாலையில் அணியவும். (கடக, சிம்ம, விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த நீலக்கல் மோதிரம் பொருந்தாது)
5. சனி காயத்திரி மந்திரமான

   **“ ஓம் காகத் வஜாய வித்மஹே கட்க ஹஸ்தாய தீமஹி தந்நோ மந்த ப்ரசோதயாத் ”**

   இதை காலையில் மாலையில் 9 முறை படிக்கவும்.

பரிகார ஸ்தலங்கள்:

“ திருநள்ளாறு ” கோவில் சென்று நளன் குளத்தில் (தலையில் 3 எண்ணெய் இட்டு) 9 (அ) 27 முறை மூழ்கி குளித்து விட்டு, (உடுத்திய துணிகளை யாவும் அங்கேயே விட்டு விடவும்) அருகில் உள்ள விநாயகருக்கு 1 சூரை தேங்காய் உடைத்து தரிசித்து விட்டு பின் திருக்கோவிலுக்கு சென்று சனீஷ்வரனுக்கு 10 எள் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து அந்த அர்ச்சனை பொருட்களை அங்கேயே வைத்து விட்டு வரவும். இதனால் சனி கிரகத்தினால் உண்டாகும் அனைத்து பாதிப்புகளும் குறையும்.

சென்னை - பல்லாவரம் அருகே “ பொழிச்சலூர் ஸ்ரீஅகஸ்தீஸ்வரர் “ கோவில் சென்று மங்கள சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்து வழிபட்டு வந்தால் சனிபகவானால் நமக்கு உண்டாகும் இன்னல்கள் தீரும்.

JAGDISH ASTROLOGER

## சனி கிரகத்திற்கு பொது பரிகாரங்கள்:

- சனிக்கிழமைகளில் காலை விரதம் அனுஷ்டித்தல்.
- தினமும் காக்கைக்கு அன்னமிடுதல்.
- வயதானவர்கள், மாற்று திறனாளிகளுக்கு பொருள் உதவி செய்தல்.
- பசு மாட்டுக்கு அகத்திக்கீரை - வாழைப்பழம் உண்பதற்கு படைக்கவும்.
- எள் தானம் செய்தல், கருப்பு, நீல நிற வஸ்திரம் தானம் செய்தல்,
- செறுப்பு தானம் செய்தல், இரும்பு தானம் செய்தல்.
- மரப் பொருட்க்கள் தானம் செய்தல்.

**இவை யாவும் சனியினால் உண்டாகும் தீங்குகளை குறைக்கும்.**

JAGDISH ASTROLOGER

## REMEDIES FOR SANI:

Sani represents poor people, beggars, hard workers, and servants, also old and disabled people. Should do good or help these peoples by any means.

1. Should see every Saturday to worship Lord Sani Bhagvan and light gingelly seeds lamp(Ellu deepam).
2. Feeding birds daily, particularly to crows.
3. Worshipping Lord Shiva and Hanuman on Saturdays will do good.
4. Helping Old age, poor and disabled people.
5. Offering Iron made articles, Chappals, wooden materials to the needy people.

**REMEDIES FOR SANI:**

6. Yearly once should go to Sani Mandir (Thirunallar) and do special Puja there.
7. Offering blue or black coloured clothes to others.
8. Wearing Blue – sapphire stone as a ring made by silver on left hand middle finger.
9. Should throw away the old useless items and waste products (old chappals, kitchen utensils, old leather bags, old useless furnitures etc.,) from your home.

   All these will reduce Sani Graha's Ill-effects.

**May God Give You and your family the Strength and Confidence, to achieve Every Thing You Wish to get in your life.**

***Good luck to everyone.***

**By - Jagdish Astrologer.**

********** சுபம் *********

JAGDISH ASTROLOGER